விலை: சதம் 75 ★★

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 6 முஹரம் 23 இதழ் 279
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 21-11-81

அரசியலமைப்புத் திட்டத்தில்

தமிழுக்கு தேசிய அந்தஸ்து ஏட்டளவில்தான் இருக்கிறது

—சபையில் யோகேஸ்

(கொழும்பு)

"அரசியலமைப்புத் திட்டத்தில் தமிழ்மொழிக்கு வழங்கப்பட்ட தேசிய அந்தஸ்து ஏட்டளவில்தான் இருக்கிறது. நிலைமை நாளுக்குநாள் மோசமாகி செல்கிறது"

இவ்வாறு யாழ்ப்பாண எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது நேற்றுப் பேசுகையில் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

"கடந்த 4 வருடம் 5 மாத காலமாகத் தமிழினம் புறக்கணிக்கப்பட்டு வந்ததால், உங்களிடம் எதையும் கேட்க நினைக்கவில்லை. 77ல் உங்கள் பொருளாதாரநிலைமை இப்போதிலும் பார்க்க முன்னேற்றமாக இருந்தது. அப்போது செய்யாததை இப்போது தமிழ் மக்களுக்குத் திட்டம் தீட்டி செய்வீர்களென்பது தவறு.

"தமிழ் மக்கள் தங்கள் பாதுகாப்புப் பற்றிப் பேசுகிறார்கள். நீங்கள் ஆளுபவர்களாக

[6-ம் பக்கம் பார்க்க]

"உபாலி விஜயவர்த்தனவுக்கு அரசாங்கம் பயப்படவில்லை"

பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் அறிக்கை

(நமது கொழும்பு நிருபர்)

"நிதிஅமைச்சராகவும், ஜனாதிபதியாகவும் வரவிரும்பும் திரு. உபாலி விஜயவர்த்தனவைக்கண்டு அரசாங்கம் பயப்படவில்லை. அவரது பல்தேச நிறுவனங்கள் குறித்து விசாரணை செய்யப்படுகிறது."

இவ்வாறு நிதி அமைச்சர் திரு. றொனி டி மெல் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் திரு. றொனி டி மெல் ஹரிஸ்பத்துவ இரண்டாவது எம். பி திரு ஆர் பி விஜேசிறி பாராளுமன்றத்தில திரு உபாலி விஜயவர்த்தன பற்றிக் குறிப்பிட்டதுதொடர்பாக நேற்றுப் பாராளுமன்றத்தில வெளியிட்ட அறிக்கையில இவ்வாறு தெரிவித்துள்ளார்,

நிதி அமைச்சர் தமதுவிசேஷ அறிக்கையில மேலும் தெரிவித்திருப்பதாவது:

திரு உபாலி விஜேவர்த்தன பல நாடுகளில பல வர்த்தகத் தொடர்புகளை வைத்திருக்கிறார். மலேஷியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற இடங்களில் பல நிறுவனங்களில் அவருக்குத் தொடர்புண்டு இங்கிலாந்து சிங்கப்பூர், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில அவருக்கு பந்தயக் குதிரைகளும் உண்டு"

இவர்மீதும் இவரது நிறுவனங்கள் மீதும் நம் கண்காணிப்பு நடத்த தொடங்கியதன் காரணமாக எம்மீது அவருக்கு ஆத்திரம் ஏற்பட்டுள்ளது. ஆகவேதான் நிதியமைச்சராகவும் வரவேண்டும் என்ற ஆவல் கொண்டுள்ளார்.

உபாலி எலக்ரோனிக் நிறுவனம் அரசாங்கத்திற்கு 15 லட்சம் ரூபா வரிப்பாக்கியைச் செலுத்த வேண்டியுள்ளது. இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அவரை விமான நிலையத்தில் தடுத்து நிறுத்த முற்பட்டது: ஆனால் அவர் தன்னிடம் ஒரு ஜனாதிபதிக்குரிய கடவுச்சீட்டுள்ளதாகக்கூறி வெளிநாடு சென்றார்.

1972ம், 1974ம் ஆண்டு காணி சீர்திருத்தச் சட்டங்கள் உபாலி விஜயவர்த்தனவுக்கு சலுகை காட்டுவதற்காகவே கொண்டு வரப்பட்டன.

"இராம் செகிறம் பெருந்தோட்டம் இலங்கையருக்கு சொந்தமானதென்று கருதி அதற்கு 8 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டுமென்று அமைச்சரவையில விவசாய அபிவிருத்தி அமைச்சர் திரு ஈ எல் சேனநாயக்க தெரிவித்தார்.

"உபாலி விஜயவர்த்தனவின் பல்தேச நிறுவனங்கள் குறித்து விசாரணை செய்யப்படுகிறது. இது குறித்தும் 'இன்டர்போல்' என்ற சர்வதேச பொலிசாரின் உதவியும் நாடப்படும்" என்றார் நிதி அமைச்சர்.

[6-ம் பக்கம் பார்க்க]

வவனியா பகுதியில்

அப்பாவி கிராமத்தினர் மீது இராணுவம் தாக்குதல்

ஜனாதிபதிக்கு எம். பி. தந்தி

(வவனியா)

வவனியாவில் பாலமோட்டை, நவ்வி ஆகிய இடங்களில் அப்பாவி கிராமவாசிகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் கோரி வவனியா எம். பி. திரு. ரி சிவசிதம்பரம் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனவுக்கு அவசரத் தந்தியை அனுப்பியிருக்கிறார். பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு வெரப்பிட்டியாவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கத்துக்கும் இத்தந்தியின் பிரதிகளை அவர் அனுப்பியுள்ளார்.

மடுவில் ஒரு இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நிலைமை மோசமானதால் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளதாக திரு சிவசிதம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பிரச்னை தொடர்பாகவிசாரணை செய்யும்படி பொலிசாருக்கு உத்தரவிடும்படியும் ஜனாதிபதியை அவர் கேட்டிருக்கிறார்.

வாழ்க்கையில் விரக்தி:

ரயில் முன் பாய்ந்து மாணவி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக உயர்வகுப்பில் படிக்கும் மாணவி ஒருவர் புகையிரதம் முன்பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்.

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் உயர்கல்வி பயிலும் மாணவியான ஆறுமுகம் கௌரி (20 வயது) என்பவரே தற்கொலை செய்தவராவார்.

இவர் தெமட்டகொடையைச் சேர்ந்தவர்.

பெற்றோரை இழந்த இவரும் இவரது சகோதரி அருள் ஜோதி (17 வயது) என்பவரும் முத்துத்தம்பி அனாதை இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்தனர்.

மரணமானவர் நேற்றுக் காலை தனது சகோதரியிடம், கல்லூரி புறப்படுமுன், தான் திரும்பிவரமாட்டேன் என்று சொன்னாராம்.

இதுவிஷயத்தை அனாதை இல்ல மேற்பார்வையாளர் எஸ். பேரின்பநாயகம் அறிந்து உடனடியாகக் கல்லூரி சென்று மாணவியை தேடினாராம். கல்லூரியில் அம் மாணவி இல்லை என அறிந்த அவருக்கு, கல்லூரி அருகாமையில் உள்ள புகையிரதப்பாதையில் சேணடையில் ஒருவர் இறந்துகிடப்பதை அறிந்தாராம். அங்குசென்று பார்த்தபோது அவர் இறந்து கிடக்கக் காணப்பட்டாராம்.

இறந்தவரின் மரண விசாரணையின்போது மேற்படி தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இறந்தவர் எழுதிவைத்த கடிதம் ஒன்றும் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்டது.

யாழ் பொலிஸ் சார்ஜன்ட் எஸ் நவரத்தினம், பொலிஸ் கான்ஸ்டபிள் கதிரமலை ஆகியோர் சாட்சியை ஆஜர் செய்தனர்.

மரணவிசாரணை அதிகாரி எஸ். எல். பிரான்சிஸ் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

இவரது சடலம் மேற்படி கல்லூரி ஆசிரியர்கள்-மாணவர்கள் அனாதை இல்லமாணவிகள் ஆகியோரது அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இந்து சமயமுறைப்படி தகனஞ் செய்யப்பட்டது.

தகனக்கிரியைகளுக்குரிய செலவுகளை அனாதை இல்லமும் அவ்வூர் பொதுமக்களும் ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அனாதை இல்லப் பொறுப்பாளர் சட்டத்தரணி எஸ் ஆர், கனகநாயகமும் ஸ்தலத்துக்கு வந்திருந்தனர். மா

தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

பரந்தன்தொழிற்சாலைபிரச்னை

நிபந்தனையின்றி அனைவரையும் வேலைக்கு அமர்த்துக!

தொழிற்சங்கம் கோரிக்கை

(கிளிநொச்சி)

கதவடைப்புச்செய்யப்பட்ட பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களை எவ்வித நிபந்தனையுமின்றி உடன் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசாங்க கூட்டுத்தாபன தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. எச் டபிள்யூ டி. பண்டிதா தொழில் ஆணையாளருக்கு அனுப்பிவைத்த மகஜரில் வற்புறுத்தியுள்ளார்.

பரந்தன் ரசாயனத்தொழிற்சாலையில் தொழிற்சங்கவாதிகள் 11பேர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 425 ஊழியர்களுக்குக் கதவடைப்புச் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் மீதான பழிவாங்கலை விடுத்து இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கும்படி தொழிற்சாலை முகாமையாளருக்கு மகஜர் அனுப்பியுள்ளேன். அவர்கள் அதற்கு இதுவரை செவிசாய்க்கவில்லை. எனவே தாங்கள் இவ்விடயத்தில் தலையிட்டு எதுவித நிபந்தனையுமின்றி தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள ஆவன செய்யவும் என்று திரு. பண்டிதா தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுத்தாபனம் மூடப்படும் நிலை ஏற்படலாம்!

விஜயானந்தன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொழிலாளரது ஐக்கியத்தையும், சங்கங்களின் பலத்தையும் முறியடிக்கும் நோக்கத்துடன், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன நிர்வாகம் மிகப் பயங்கரமான நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், கூட்டுத்தாபனத்தின் பல தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிர்வாகம் நீண்டகாலமாகத் தட்டிக்கழித்து வருவதாகவும், லங்கா தொழிற்சங்க சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் திரு சி விஜயானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில், சட்டப்படி வேலை செய்த பெருந்தொகையான ஊழியர்களை வேலையிலிருந்து அகற்றும் நோக்குடன் தென் இலங்கையிலிருந்து யூ. என். பி ஆதரவா

[6-ம் பக்கம் பார்க்க]

விபத்தில் பலியான
தொழிலாளிக்கு சகஊழியர் நிதி உதவி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற் விபத்தில் இறந்த அநாதரவான தொழிலாளி ஒருவரது குடும்பத்திற்கு சக தொழிலாளர்கள் நிதியுதவி செய்து 16 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளியான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இ. பத்மநாதன் மின் தாக்கி பரிதாபகரமாக மரணமானார். இவரது குடும்பத்திற்கு மேற்படி சங்கத்தின் சகதொழிலாளர்கள் நிதியுதவி செய்ததன் மூலம் 16 ஆயிரம் ரூபாவை மேற்படி கி. மு. சங்கத்தலைவர் திரு மரியாம்பிள்ளை வழங்கியுள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துள்ள ஏனைய கிராம முன்னேற்றச் சங்கங்களையும் இத்தொழிலாளியின் குடும்பத்திற்கு உதவுமாறு ஊறணி கி. மு. சங்கம் கோரியிருந்தது. இதற்கிணங்க தையிட்டி கி.மு. சங்கம் மட்டும் 1600 ரூபாவை வழங்கியுள்ளதாகவும் ஏனைய சங்கங்கள் நிதியுதவி எதுவும் வழங்க முன்வரவில்லையென்றும் சங்கத்தலைவர் திரு. ம. மரியாம்பிள்ளை தெரிவித்தார்.

பரந்தன் தொழிற்சாலை
தற்காலிக வேலை நீக்கத்தை வாபஸ் பெறுக'

[கொழும்பு]

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் தமது கிளைச் சங்கத் தலைவர்கள் மீதும் வேறு சங்கங்களின் இணைத்தலைவர்கள் மீதும் விதிக்கப்பட்டிருக்கும் தற்காலிக வேலைநீக்க உத்தரவை வாபஸ் பெறுமாறு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு பாலா தம்பு கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவைக் கோரியுள்ளார்.

திரு தம்பு அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சங்கக்காரியாலயங்கள் மீண்டும் இச்சங்கங்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்றும் எல்லாத் தொழிலாளர்களும் மீண்டும் வேலை செய்வதற்கு ஏதுவாக நிர்வாகத்தினர் அமுல் செய்துவரும் கதவடைப்பினைக் கைவிட வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தை முடிவிற்குக் கொண்டு வரும் பொருட்டு இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்துப்பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமென்றும் திரு. தம்பு குறிப்பிட்டுள்ளார். (அ)

பனம்பொருள் உற்பத்திகளில் புதிய நுட்பமுறை தேவை

[சாவகச்சேரி]

இப்பகுதிக்கு ஒரு பனம்பொருள் உற்பத்தி நிலையம் தேவை இங்கே பயிற்சி அளிப்பதற்காகப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையினால் அனுப்பப்பட்டிருப்பவரின் புதிய பயிற்சி முறையினால் பெரிதும் பயனடைவீர்கள்"

மட்டுவில் தெற்கில் பனம் பொருள் உற்பத்திச் சபையினால் நடாத்தப்படும் பனம் பொருள் உற்பத்தி நிலைய அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய அபிவிருத்தி அதிகாரி திரு. க. இராசரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருமதி புனிதம் நவரத்தினம் தலைமையில் நடந்த விழாவில் திரு இராசரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது! பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் சபைக்குத் தேவையான பொருட்களுக்கு புதிய நுட்பமுறை பின்பற்றி விற்பனவு வசதியை ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். மட்டுவில் கதிர் சங்கத்தைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் விரும்புகின்ற சகல பனம் பொருள் உற்பத்திப் பொருட்களுக்கும் பயிற்சியை அளித்து ஊக்குவிப்பதும் பொதுவாக மக்களுக்குத் தேவையான பனம் பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பயிற்சி அளிப்பதுமே எமது முக்கிய நோக்கமாகும்.

பூரணமான உற்பத்திப் பொருட்களைச் செய்யவழி வகுக்கும் இந்த ஆசிரியப் பயிற்சி வகுப்பு மட்டுவில் தெற்கில் தொடங்கி ஏனைய மாதர் சங்கப் பயிற்சியாளர்களுக்கும் கூடிய விரைவில் பயிற்சியளிக்க ஆயத்தங்கள் செய்யப்படும்.

பனம் பொருள் உற்பத்திச் சபைத்திட்ட அதிகாரி திரு. வி. இ. சண்முகமும் உரை நிகழ்த்தினார். (க)

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்
கேள்வி
அறிவித்தல்

கீழ் வரும் மின்சார வேலைக்கு 27-11-1981-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாநகர மண்டபத்துக்குத் திரும்பவும் மின்வயர் இணைத்தலும், மின்சார உபகரணங்கள், மின் விளக்குகள், மின்விசிறிகள் விநியோகித்து அவற்றை இணைத்தலும்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப்பணமாக ரூ. 100/-ம் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூ. 30/-ம் செலுத்துவதின் பேரில் 26-11-1981-ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மின் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்கள் மீது கேள்விகளை இணைப்பிரதியில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மின் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்.
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-11-1981. (1514)

சவூதியில்
அகால மரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இரும்பியடியைச் சேர்ந்த பொன்னுத்துரை சர்வேஸ்வரன் என்ற இளைஞர் சவூதி அரேபியாவில் நடந்த விபத்தில் பலியானார்.

31 வயதான இவர் சுமார் ஒரு வருடகாலமாகச் சவூதி அரேபியாவில் பணியாற்றி வந்ததாகவும், இரு மாதங்களுக்கு முன்னரே திருமணப்பதிவு செய்துகொண்டாரெனவும், திருமணம் விரைவில் நடைபெறவிருந்ததாகவும் தெரிய வருகிறது.

இவரது சடலத்தைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (க-வி)

வரிவிளம்பரம்

தேவை

கூட்டுத்தாபன எஞ்சினியருக்கு வசதியான வீடு வாடகைக்கு கொக்குவில், சுன்னாகம், மல்லாகம் அல்லது தெல்லிப்பளையில், பிரதான வீதிக்கருகாமையில் வேண்டும். தெரிவிக்கவும் P நவரத்தினம் சட்டத்தரணி கொக்குவில். 1493

யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது திருநெல்வேலியில் பண்ணைக்காணி அல்லது வயற்காணி தேவை. கடிதமூலம் தொடர்புகொள்ளவும். தாயகி பிறிண்டேர்ஸ், 216 (5304, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1454

பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் டிப்ளோமா பயிற்சி 23 11-81 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னோலஜி, 9. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1513

தேவை

யாழ் நகரில் பிரபல நிறுவனத்தில் பணியாற்ற தையல் வேலையில் சிறந்த பயிற்சிபெற்றவர்கள் மேற்பார்வையாளர் பதவிக்கு பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் மாத சம்பளம்- 700/- மேல் Computer Programming பயிற்சி பெற்றவர்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் மாத சம்பளம். ரூபா 1000/- மேல். Hotel Management பயிற்சிபெற்றவர்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் மாத சம்பளம் ரூபா 1000/- மேல் 25-11-81 முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல 1494 மே/பா ஈழநாடு, த பெ எண் 49, யாழ்ப்பாணம். 1494

பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனம்
நியாயாதிக்கம்: இல. 1125

பருத்தித்துறை செட்டித்தெரு சபாரத்தினம் பெண் மங்கையர்க்கரசியின் மரண சாதனமில்லாத சொத்தின் விடயத்தில்

விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு, செட்டித்தெரு, பருத்தித்துறை.

-மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும், 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 11-ம் திகதியன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

நீதிமன்றின் கட்டளைப்படி
பதிவாளர்

என்னால் தயாரிக்கப்பட்டது.
மூ. ஈசுரபாதம்
மனுதாரின் சட்டத்தரணி.
1496

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட
நீதிமன்றம்

காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலஞ்சென்ற தில்லையம்பலம் வேலுப்பிள்ளையின் மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்
வழ. இல. ரி/42

வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம், களபூமி, காரைநகர்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதன் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
சி. அந்தோனிப்பிள்ளை,
பதிவாளர்.
வரைதல்
ஒப்பம்
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி
1495

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

மீண்டும் ஆரம்பம்!

நொதேண் ஸ்போட்ஸ் கழகம்
(அங்கத்தவர்கள் மட்டும்)

யாழ். ஆஸ்பத்திரி வீதி, 160-ம் இலக்கத்தில்
இயங்கி வந்த
நொதேண் ஸ்போட்ஸ் கழகம்
புதிய திருத்தங்களுடன்
21-11-81 சனிக்கிழமை காலை 10 மணிக்கு
"நாடோடி மன்னன்'' டெலிவிஷன் படக்காட்சியுடன்
மீண்டும் மங்களகரமாக
ஆரம்பித்துவைக்கப்படவிருக்கிறது.

தலைவர்.

15 0

இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 6-ம் திகதி
சனிக்கிழமை
(21-11-81)

மேடம்: வாழ்க்கை ஒருமையாகத் தோன்றும் உடன் தொல்லைகள் அதிகரிக்கும் இத்தன்மையை ஒருவழிப்படுத்தி செயலாற்றுக

இடபம்: புண்ணிய காரியங்களில் விருப்பு ஏற்படும். பிதா வழி வரவுகளும் உண்டு. கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

மிதுனம்- ஒப்பீட மாத்திரத்துக்கான ஆலோசனைகள் இடம்பெறும், பிறரின் ஆதிக்கம் உங்கள் மீது செலுத்தப்படும். அரசாங்க ஊழியரின் உயர்வு காணப்படும்.

கடகம்- நீண்டநாள் கனவு இன்று நனவாகும். சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு. இவருக்கு பூமிப் பிணக்கு நிவர்த்தியாகும்.

சிங்கம்: நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும். தொழிலாலே தொல்லைதோன்றும், இறை வழிபாடு நன்று.

கன்னி: முகமன் பேசிக்கொண்டே உங்களுக்கு முன்னேற்றத்தை தடுப்பதற்கு எதிர்கள் முயற்சி செய்வார்கள். மனைவி உறவு முறை பூசல்கள் நிறைந்ததாக இருக்கும் பொறுமை விரும்பத்தக்கது.

துலாம்: வாழ்க்கை தேனாய் இனிக்கும், சிலர் வாழ்க்கையில் அரசினர் விருந்தும் கிடைக்கக்கூடும். புதிய துறையின் மூலம் பொருளைத் தேடுவீர்கள். உடல் நலத்திற்கு நல்ல முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்: ஏக்கத்தின் சாயல் நிழல் போல் தொடரும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வேதனையைத் தரும், மூர்க்கத்தினால் கலகங்களும் தோன்றக்கூடும், ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்

தனு: இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று சிறப்பான தினங்களிலும் நல்ல அபிவிருத்தி தென்படுகின்றது. ஆசிரியர்களுக்கு செல்வாக்குப் பெருக இடமுண்டு

மகரம்: கொள்கையில் அதிக பற்றுகள் ஏற்படும், இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள், இசை கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு. ஒளியின் செல்வாக்குப் பெருகும்.

கும்பம்: ஏமாற்றலின் தாக்குதலைக் அவதிப்படுவீர்கள். தொழில் புரியும் இடத்தில்

(5ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.
—திருக்குறள்

நமது நோக்கு

உப்பில்லா உண்டி

'நெய்யில்லா உண்டி பாழ்' என்பதுதான் பாட்டு. மக்கள்படும் பாட்டில் 'நெய்க்கு வழி ஏது?' எனவே அவசியமானதால சட்டத்தை மீறிப் பாட்டை மாற்றத்துணிந்தோம்.

நாம் எதிர்பார்த்தது போல் பச்சைத்தண்ணீர் பட்ஜெட்டுக்கு கிடைத்து வரும் விமர்சனம் அது போன்றதே; சாடிக்கேற்ற மூடி.

ஆதரவாளர்களுள் பச்சைத்தண்ணீரை அபூர்வமான பானமென்று சொல்லத்துணிந்தவர்கள் சிலர்! இவர்களுடைய துணிச்சலுக்குத் தகுந்த விவேகமிருந்திருந்தால் நாட்டின் ஆட்சியே நன்மைபெற்றிருக்கும்.

எதிர்க்கட்சிக் கண்டனம் விடயத்தை வெளியேவிட்டு தமக்கள் துயரங்களுக்கு ஒப்பாரி வைப்பதாகமுடிந்தது.

அரசின் தரப்பில பேசிய நீதிஅமைச்சர் டாக்டர் நிஸங்க விஜயரத்ன (மருத்துவ டாக்டர் அல்ல) தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் பேச்சைக்கண்டித்ததில் நியாயம் உண்டு. தமிழ்மக்களின் பிரச்சினைகள் பட்ஜெட்டுடன் இணைந்ததாயிருக்கலாம். அவற்றைஎடுத்துரைக்கும்போதெல்லாம் நாட்டின் ஆட்சி, பொருளாதாரம் என்ற பரந்துவிரிந்த நோக்கில் அவை இணைந்துஇடம்பெற்றுச் சபைக்கும் நாட்டு மக்களுக்கும் புதிய சிந்தனைகள் ஏற்படுத்தியிருக்கலாம்;

பச்சைப்படியாக தமிழ் மக்களின் துயர்களை இப்பாரிய விடயத்தில் பொருத்தமற்றுப்பேசுவது தமிழர் பிரச்சினை தீர்வதற்கு எவ்விதத்திலும் உதவாது.

இந்தச்சந்தர்ப்பத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் இரத்தினத்தின் பேச்சு மிகப்பொருத்தமானதும் பொருள் செறிந்ததுமாகும்.

உலகுக்கு ஜனநாயக கோட்பாட்டை அறிமுகப்படுத்திய அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் வழங்கிய வரைவிலக்கணம்: 'மக்கள் ஆட்சி; மக்களின் நன்மைக்கு; மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படுவது" என்றார்.

இன்று அமெரிக்காவில் நடைபெறும் ஜனநாயக ஆட்சியைக் கண்டித்த செனட்டர் எட்வார்ட் கெனடி சொல்வது: செல்வந்தர் ஆட்சி, செல்வந்தர்களின் நலனுக்காக! செல்வந்தர்களின் பிரதிநிதிகளால் நடத்தப்படுகிறது என்றார்.

எம்மைக் கவர்ந்த இந்தக் குறிப்பு எங்கள் நாட்டுக்குப் பொருத்தமில்லையா? பொருத்தமென்பதைத் திடமாகவும் தெளிவாகவும் கூறியவர் பண்டிதர் கே. பி. இரத்தினம்.

சிலபல செல்வர்களுக்கும் அவர்கள் ஸ்தாபனங்களுக்கும் உதவிஅளித்துவரும் பொருளாதாரக் கொள்கை நாட்டின் வளர்ச்சிக்குத் தடைபோட்டுவிட்டது என்றுகூறிய திரு. ரத்தினம் ஏழைமக்களுக்குபோதவாகவும் தமிழ் விவசாயிகளுக்கும் சிறு கைத்தொழிலாளர்களுக்கும் சிறப்பாகவும், அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கை பெருந்தீங்கு விளைத்தது என்று ஆணித்தரமாக இறுக்கியிருக்கிறார்.

உப்பில்லா உண்டி என்று நாம் குறிப்பிட்டது நிதி அமைச்சரின் பட்ஜெட்டை மட்டுமல்ல; அதில் எழுந்த விவாதத்தையுங் கூட! இந்தப் பரிதாப நிலையை உணர்ந்து நெருக்கடிக்கு உதவ வேண்டுமென்று எழுந்த எதிர்க்கட்சியினரில் எவருமே இல்லை! அது அரசாங்க அங்கத்தவரே!

முன்னைநாள் அமைச்சர் அதுவும் நிதி அமைச்சர், ஐ. தே. கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர் முன்னொரு பட்ஜெட்டைச் சின்னாபின்னமாகக் கிழித்தெறிந்த அமைச்சர் என்பதால் அப்பதவியை இழந்தவர்; இருந்தும் ஐ. தே. கட்சியில் விசுவாசம் கொண்டவர், கடுவலை எம். பி. திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனா! இவரே செத்துக்கிடந்த பாம்பை அடிகொடுத்து உயிர் அளித்து எழுப்பியவர் அவருடைய பேச்சின் நுட்பம் நிதியமைச்சருக்கெட்டாத கொப்பில் இருந்தது. அவருடைய விமர்சனம் பொருட்செறிவற்றதென்று நாம் எள்ளளவும் கருதவில்லை; அதற்கு மேலாகச் சபையோரை நித்திரையில் இருந்து எழுப்பவும், வாதிப்போரை உஷார் நிலையில் வைக்கவும், கேட்போரைப் பட்டினி நிலையிலும் குலுங்கிச் சிரிக்க வைக்கவும் அவர் முயன்றதும் ஒரு தேசிய சேவையாக கருதவேண்டும்.

நிதி அமைச்சரை இரக்கமின்றி பிய்த்தெறிந்த போதும் ஆட்சியில் அச்சாணியாகத் தன் சேவையைத் தொடரத் தயாரென்றபோது அவருடைய பேச்சுக்கு சபையின் இருபகுதிகளும் "சபாஷ்," சொல்லவேண்டும்.

ராஜினாமா செய்ய வற்புறுத்து

(கொழும்பு)

வேலைநேரத்தில், மஹரகம வாடிவீட்டிலே இளம் பெண் ஒருவருடன் இருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட கூட்டுத்தாபனமொன்றின் உபதலைவரை பதவியிலிருந்தும் ராஜினாமாச் செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது.

ராஜாங்க அமைச்சரை, இது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கும்படி ஜனாதிபதி பணித்திருந்தார். தனக்கெதிரான இக் குற்றச்சாட்டை மறுத்திருக்கும் மேற்படி கூட்டுத்தாபன உபதலைவர் தன்னுடனிருந்த பெண் தனது மனைவியென்று தெரிவித்துள்ளார்.

ராஜாங்க அமைச்சர், இது பற்றிக் கூறுகையில், எது எவ்வாறெனினும் ஒழுக்கத்துக்கு முதலிடமளித்து அது பேணப்படவேண்டியது அவசியமென்று தெரிவித்தார்.

(கி)

சேவையை லட்சியமாகக் கொண்டது லயன்ஸ் கழகம்

வடபகுதி லயன்ஸ் கழகத்தின் பிரதேசக் கருத்தரங்கு நாளை காலை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறுவதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

க. நடனசபாபதி

தொண்டு செய்வதையே நோக்கமாகக் கொண்டோர் உலகெங்கும் உள்ளனர். அவர்களிடையே நாடு, மதம், மொழி, இனம் என்ற பாகுபாடே கிடையாது. இத்தகையோர் அனைவரையும் ஒருங்கிணைக்கும் நோக்கோடு மெல்வின் ஜோன்ஸ் என்பவரால் லயன்ஸ் கழகம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. ஆடவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட இந்த இயக்கம் சேவையையும், உறுப்பினரிடையே தோழமை உணர்வை வளர்ப்பதையும் தன்னிரு கண்களாகப் போற்றி வருகிறது.

உறுப்புரிமை

சமூகத்தில் தொண்டாலும் பண்பாலும் உயர்ந்தவர்களாகக் கணிக்கப்படுபவரை அணுகி அழைத்து வந்து உறுப்பினர் ஆக்கும் முறையே இருந்து வருகிறது. உறுப்பினராகச் சேர்க்கத் தகுதியுடையவரை மூன்று முறையாவது கழகக் கூட்டத்திற்கு விருந்தினராய் அழைத்துவந்து கழகத்தின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளவும், உறுப்பினர்களின் ஆற்றல்களையும் சிறப்பியல்புகளையும் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பளித்து அதன் பின் அவருடைய சம்மதத்தையும் பெற்ற அதன் பின்னரே சேர்த்துக் கொள்ளும் மரபு கையாளப்படுகிறது.

அவ்வப்பொழுது தலைமை நிலையத்தினரால நிர்ணயிக்கப்படும் நுழைவுக் கட்டணமும், மாதச் சந்தாத் தொகையும் உறுப்பினரிடமிருந்து சேகரிக்கப்படுகிறது.

மாவட்ட ஆளுநர்
சுனில் வத்தவல

சேவையையும் தோழமையையும் தொடர்ந்து வளர்ப்பது உறுப்பினரின் கடமையாதலின் கழகத்தினுள் பணிக்கப்படும் சேவைத் திட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட கூட்டங்களிலும் பங்கு கொள்ளுவதென்றும் உறுதிமொழி ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் பெறப்படுகிறது.

நோக்கங்கள்

உறுப்பினர்கள் தத்தம நாட்டுக்கு விசுவாசமான குடிமக்களாய்த் திகழவேண்டுமென்பதும் இன, மொழி, மத வேறுபாடுகளைப் பாராட்டாத பண்புடையோராகத் திகழவேண்டுமென்பதும், கழகத்தை அரசியல் சார்பற்ற இயக்கமாகக் கொண்டு செல்லவேண்டுமென்பதும், தமது ஆற்றலின் ஒரு பகுதியாவது நாட்டின் நலனுக்கு அர்ப்பணிக்கவேண்டுமென்பதும் சிறப்பான நோக்கங்களாக இவ்வியக்கம் கொண்டுள்ளது.

இலங்கையில் லயன்ஸ் கழகம்

நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களில் லயன்ஸ் கழகம் இயங்குகிறது. 306ஏ, 306பி ஆகிய இரு மாவட்டங்களாகப்பிரிந்து செயற்படும் மாவட்டங்களில் இக்கழகங்கள் இடம்பெறுகின்றன. இவ்விரு மாவட்டங்களும் இரு ஆளுநர்களைக் கொண்டுள்ளது. 306ஏ மாவட்டத்து ஆளுநர்-லயன்ஸ் வின்ஸ்ரன் [illegible], 306பி மாவட்டத்து ஆளுநர்-லயன் சுனில் வத்தவல 306 பி மாவட்டம் ஆறு பதில் ஆளுநர்களைக் கொண்டது. ஒவ்வொரு பதில் ஆளுநர் பகுதியும் இரு வலயங்களாக ஒவ்வொரு வலயமும் ஒரு தவிசாளரைக் கொண்டது. ஒவ்வொரு துறைக்குமென ஆலோசனை வழங்க 28 மாவட்ட தவிசாளர்கள் உள்ளனர்.

வடபிரதேசம்

வடபிரதேசம் 6ம் பகுதியாகப் பிரிக்கப்பட்டு பதில் ஆளுநர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் பொறுப்பில் உள்ளது. முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை, பருத்தித்துறை ஆகிய 8 கழகங்களும் 6ம் பகுதியில் இயங்குகின்றன.

6-ம் பகுதி

பகுதி - 6 வலயம் I

தவிசாளர்; லயன் கே அருணாசலம்

கழகங்கள்: 1 மன்னார் 2. முல்லைத்தீவு 3. வட்டுக்கோட்டை 4 தெல்லிப்பழை 5 பருத்தித்துறை

கழகத்தலைவர்கள்;

மன்னார்: லயன் எஸ் எஸ். தாவூடின்.
முல்லைத்தீவு: லயன் வி. சுந்தரலிங்கம்
வட்டுக்கோட்டை; லயன் கே குணரத்தினம்.
தெல்லிப்பழை; லயன் ஏ ஸ்ரீதரன்.
பருத்தித்துறை: லயன் வி. சிவராசசிங்கம்.

பகுதி : 6 வலயம் II

தவிசாளர்; லயன் பீ. தேவேந்திரன்

கழகங்கள்;

1. சாவகச்சேரி 2. யாழ்ப்பாணம் 3. வவுனியா

கழகத்தலைவர்கள்:

சாவகச்சேரி; லயன் கே. துரைராஜா.
யாழ்ப்பாணம்; லயன் எஸ். செபஸ்தியாம்பிள்ளை
வவுனியா; டாக்டர் எஸ். இராஜதுரை

6ம் பகுதியில் உறுப்பினராயுள்ள மாவட்டத் தவிசாளர்கள்;

லயன் எம். ஜே. ஏ. ஜெயநாதன் (யாழ்ப்பாணம்).
லயன் ஜி. யுகேந்திரன் (யாழ்ப்பாணம்).
லயன் வி. எஸ். சுப்பிரமணியம் (தெல்லிப்பழை).
லயன் கே. நடனசபாபதி (பருத்தித்துறை).



பதில் மாவட்ட ஆளுநர்
பேராசிரியர்
வி. க. கணேசலிங்கம்

வடபிரதேசக் கழகங்களின் சேவை

வடபிரதேச லயன்ஸ் கழகங்கள் கடந்த ஜூலை மாதம் முதல் இதுவரை சமுதாய நலன் கருதிப் பல சேவைத் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டன. கடந்த 5 மாதங்களில் மாத்திரம் நூற்று இருபதுக்கும் மேற்பட்ட சேவைத் திட்டங்கள் சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேலான பெறுமதியில் செயற்பட்டுவந்துள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் வரை மேற்கொள்ளவேண்டிய சேவைத்திட்டங்களை மேலும் சிறப்பாய்ச்செய்வதற்கு வேண்டிய ஆலோசனைகளைப் பெறவும், அதற்கான நிதிசேகரிப்பு, திட்டங்களைச் செயற்படுத்தவும், கழக நிர்வாகத்தை மேலும் வலுவாக்கவும் ஏற்ற திட்டங்களை வகுக்குமுகமாக இன்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் காலை 9-00 மணிக்கு பிரதேசக்கருத்தரங்கு நடைபெறுகிறது. இக்கருத்தரங்கில் தெற்கிலிருந்து பல அறிஞர்கள் கலந்துகொள்கின்றனர்; ஆளுநர் சுனில் வத்தவல, பேராசிரியர் மகிம் பேர்ணட்சோ, நவாடிசறூன் (சட்டத்தரணி) லயன் நசீர் அலுவிகாரா, லயன் மன்சூர் (வுஸ்)முன்னைய ஆளுநர்) ஆகியோரும் யாழ்ப்பாணம் பிரபல டாக்டர் யோக பசுபதியும் இக்கருத்தரங்கில் பங்குபற்றுகிறார்கள் இக்கருத்தரங்கிற்கு பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமை வகிப்பார். (அ

மக்கள் கருத்து

ஆழிக்குமரன் சுகமடையப் பிரார்த்திப்போம்

3 10-81 அன்று ஆழிக்குமரன் ஆனந்தனின் நண்பர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு ஆனந்தனின் மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்று விட்டார். மாலை 5-10 மணியளவில் ஆனந்தன் நண்பரின் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்ட போது மோட்டார் சைக்கிள் இயங்க மறுத்துவிட்டது அவர் வசிக்கும் ஹிடன் பிளேஸ் வழியே அதனைத் தள்ளிக் கொண்டுபோக ஆரம்பித்தபோது ஒரு கார் அவரைமோதி வீழ்த்தியது கார் அவரை விலக்கிச்செல்ல எவ்வளவோ முயன்றிருந்தும் காலத்தின்சோதனையாலும் இத் துரதிர்ஷ்டம் நிகழ்ந்துவிட்டது ஆனந்தனுக்கு வாயாலும், மூக்காலும் இரத்தம் வழிந்தபடியே இருந்தது, ஸ்மரணை இல்லை. சிகிச்சைப் பிரிவில் ஆனந்தனுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த டாக்டர் இராமநாதனும், டாக்டர் கணேசரத்தினமும் அவனை ஆப்பரேஷன் செய்தார்கள். அவர்களின் அப்போதைய கூற்றின்படி 95வீதத்திற்குமேல் அவரது உயிர் நிச்

(6ம் பக்கம் பார்க்க)

போலந்தில் உணவு நெருக்கடி அதிகரிப்பு!

உணவுப் பொருட்களை அனுப்புமாறு மேற்குநாடுகளிடம் வேண்டுகோள்

வார்சோ, நவம்பர் 20

போலந்தின் தற்போதைய உணவுநெருக்கடியைத் தீர்க்க உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கும்படி மேற்கு நாடுகளின் தொழிற்சங்கங்களை போலந்து சுதந்திரதொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் திரு வலேசா கேட்டுள்ளார். அடுத்த மாதம் போலந்தில் உணவுநிலை சீரடையாவிட்டால் இங்கு குழப்பமான ஒரு நிலை ஏற்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போலந்தில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதாரநிலை காரணமாக அந்நாட்டின் தொழிற்சங்கங்களுக்கும் ஆபத்துவரலாமென அவர் எச்சரித்துள்ளார்.

போலந்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிநிலை குறித்து அந்நாட்டின் அரசாங்கம் சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்துடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

இப் பேச்சுவார்த்தையின் போது போலந்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை நீக்க அரசுடன் ஒத்துழைப்பதாக சுதந்திரதொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்திருந்தது. (வெ)

பதவியேற்பு

டாக்கா, நவ 20

பங்களாதேஷின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாப் அப்துல் சதார் இன்று பதவியேற்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியாகப் பதவியேற்கும் ஜனாப் சதார் [illegible]லான அமைச்சரவையொன்றையும் இன்று அமைக்கவுள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டது.

பாவனையாளர் சமாஜ

செயலாளர் பதவி

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட பாவனையாளர் சங்க சமாஜக் கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது செயலாளர் பதவிக்கு இருவர் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன.

இவ்விருவரில் ஒருவர் வாபஸ் வாங்க வேண்டுமென்றும், போட்டியின்றியே உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெறவேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரச்னை கூட்டத்திற் சிறு சலசலப்பை ஏற்படுத்தினாலும் முடிவில் முன்பு பிரேரிக்கப்பட்டவரின் பெயரை பிரேரித்தவர் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

வாபஸ் வாங்கப்பட்டவர் பின்பு பொருளாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். [ம]

திருப்பத்தூரில் எம்.ஜி.ஆர். சுற்றுப் பயணம் செய்வார்

இந்திரா வேட்பாளரை ஆதரித்தும் பிரசாரம்

சென்னை, நவ 20

திருப்பத்தூர் இடைத்தேர்தலில் போட்டியிடும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் அங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்யவுள்ளாரென தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ் தலைவர் திரு எம். பி சுப்பிரமணியம் மதுரையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

அதேவேளை திருப்பத்தூர் இடைத்தேர்தல் பிரசார வேலைகளைக் கவனிக்கும் பொருட்டு இந்திராகாங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கருப்பையா மூப்பனார் இன்று திருப்பத்தூர் செல்லவுள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டது.

திருப்பத்தூர் இடைத்தேர்தல் இம்மாதம் 29ம் திகதி நடைபெறவிருப்பது தெரிந்ததே. (வெ)

திருப்பத்தூர் இடைத்தேர்தல்: அ.தி.மு.க, தி.மு.க. முடிவு: வெங்கட்ராமன் வரவேற்பு

சென்னை, நவ 20

"திருப்பத்தூர் இடைத் தேர்தலில் இந்திராகாங்கிரஸ் கட்சியை ஆதரிக்க அ. தி. மு. க. வும், தி. மு. க. வும் முன்வந்துள்ளமை அக் கட்சியில் அவை வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது"

இவ்வாறு மத்திய நிதியமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் திருப்பத்தூர் இடைத்தேர்தல் தொடர்பான பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது!

இந்திராகாங்கிரஸ் கட்சியை எதிர்ப்பவர்கள் மக்களை திசை திருப்ப முயலுகிறார்கள். அ. தி. மு. க., தி. மு. க வைப் பின்பற்றி ஏனைய கட்சிகளும் இந்திராகாங்கிரசை ஆதரிக்கவேண்டும்.

"இந்தியா உணவுத் தானியங்களை மற்றைய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் நிலையில் தற்போதுள்ளது" என்றார்.

மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர் திரு ஆர். வி சுவாமிநாதன் உரையாற்றுகையில் கூறியதாவது!

"இந்தியாவிற்கு ஸ்திரமான ஆட்சியைப் பெற்றுக்கொடுத்து, சர்வதேச அரங்கில் அதன் புகழை நிலைநாட்டியவர் திருமதி இந்திரா காந்திதான்" என்றார். (வெ)

"மாணவர் பலாத்காரத்தில் ஈடுபடக்கூடாது"

யாழ். அபி. சபை உறுப்பினர் உரை

யாழ்ப்பாணம்]

"மாணவர்கள் பலாத்காரத்தில் ஈடுபடக்கூடாது. பெரியோர்களின் புத்திமதிகளைக் கேட்டு ஓரணியில் ஒன்றுதிரண்டு, எமது கலை, கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். மாணவர்களுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிகவும் அவசியம். இவை இல்லாத கல்வியால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஒழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்குவது ஆசிரியர்களதும், அதிபர்களதும் கடமையாகும்"

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. சங்கரப்பிள்ளை பூபாலசிங்கம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் மதிய போசனவிருந்து வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது!

"விருந்தோம்பல் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை வலியுறுத்துகின்றது. இவ்விதமான விருந்துபசாரங்களின் மூலம் சாதிவேற்றுமைகளை ஒழித்து சமூக ஒற்றுமையாக வாழலாம்! இந்துசமயம் விருந்தோம்பலுக்கு முக்கிய இடத்தை அளித்துள்ளது. திருக்குறளிலும் விருந்தோம்பலின் சிறப்புப் பற்றி வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்" என்றார். (வெ)

உலக உணவுதின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட திட்டமிடல் பிரிவு உலக உணவு தினத்தையொட்டி யாழ் மாவட்ட கல்லூரிகளுக்கிடையில் நடாத்திய கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவமும், கருத்தரங்கும் இம்மாதம் 26 ம் திகதி காலை யாழ்ப்பாண செயலக வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் யாழ் கல்விப் பணிப்பாளர் கே. சிவதாஸன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத்துறை பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன், டாக்டர் என். ஜெயராஜா, விரிவுரையாளர் கே. பாலகிருஷ்ணன் உட்பட பலர் உரையாற்றுவர்.

மாவட்ட அடிப்படையில் பேச்சுப்போட்டியில் பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்:-

முதலாம் இடம்- நா சீதாலட்சுமி, நயினாதீவு மகாவித்தியாலயம். இரண்டாம் இடம்- ஆ. சோதீஸ்வரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி. மூன்றாம் இடம்- ச. மேனன் வேஜினி, இளவாலை, கன்னியர்மட மகாவித்தியாலயம். நான்காம் இடம்- லோ மதியழகன், சென்லிவ்கல்லூரி, பருத்தித்துறை. ஐந்தாம் இடம்- இ முத்துலிங்கம், கிளிநொச்சி மகாவித்தியாலயம். ஆறாவது இடம்- இ ரஞ்சனேஸ்வரி, இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

கட்டுரைப் போட்டியில் தெரிவாகியோர் விபரம்:,

முதலாவது இடம்- த. நந்தகுமாரி, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். இரண்டாம் இடம்- எஸ் ஏ. கௌசமா, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். மூன்றாம் இடம்- ந ஜோதிநிதி, நயினாதீவு, மகாவித்தியாலயம். நான்காம் இடம்- (இருவர்) ச. சரோஜினி, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். மு. க. இளங்கோ, இடைக்காடு, மகாவித்தியாலயம், அச்சுவேலி. ஆறாவது இடம்- சி. பாஸ்கரி, இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி. இவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும். (வெ)

சமாதான நீதவான்

நயினாதீவு எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தொழிலதிபருமான திரு. கந்தையா [illegible] யாழ் மாவட்ட சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினரும், நயினாதீவு அபிவிருத்திச் சபை நிதிப் பொறுப்பாளருமாவார். இவர் இம்மாதம் இருபத்தி மூன்றாம் திகதி காலை மாவட்ட நீதிபதி திரு கே. பாலகிட்ணர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வார். (வெ)

★ சபையில் கேட்டவை

உபாலி விஜயவர்த்தன ஜனாதிபதியாவாராம்

விஜேசிறி எம். பி. ஆருடம்

ஆர். பி. விஜேசிறி [சு க]: பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராக இருக்கத் தகுதியற்றவர் என்று திரு. உபாலி விஜயவர்த்தன காணப்பட்டார். எனினும் அவரின் நடவடிக்கைகள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கமுடியாதவர்களாக இவர்கள் இருக்கின்றனர். ஒன்றில் உபாலிக்கு இவர்கள் பயப்படுகிறார்கள். அல்லது அவர் அதிசக்திபடைத்தவராய் இருக்கிறார்.

சபாநாயகர்: சபையில் இல்லாத உத்தியோகத்தர் எவர் மீதும் குற்றம் சுமத்தவேண்டாம்.

விஜே: அவர் இச்சபைக்கு வருவார் என்று நான் நினைக்கிறேன். (சிரிப்பு)

சபாநாயகர்: நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் அவர் வந்தபின் நீங்கள் இதைக் கிளப்புங்கள்.

விஜே: அவர் இங்கு வந்தபின் பதில் அளிக்கட்டுமே! (சிரிப்பு)

விஜே: சாராயத்தின் விலையை அதிகரித்து சாதாரண மனிதன் சிறிது நேரமாவது கவலைகளை மறந்து இருக்கமுடியாது செய்துவிட்டீர்கள்!

ஒரு குரல்: நீங்கள் சாராயம் அருந்துவதில்லையா?

விஜே: நான் அப்பட்டதைக் குடிப்பேன். உங்களைப் போல ஒளித்தும் குடிப்பதில்லை!

விஜே: நான் யாருக்கும் வாங்கிக் கொடுப்பதில்லை. இலவசமாகக் கிடைத்தால் குடிப்பேன்!

விஜே: யூ. டீ. எட்மன் கோரிக்கையில்தான் 'பியரி'ன் விலையைக் குறைத்திருப்பதாக அறிகிறேன். பியர் அருந்துபவர்கள் சாதாரண மக்களா?

றொனி: நான் விளக்கமளிக்கிறேன். திரு. காமினி திசாநாயக்காவின் கோரிக்கையில்தான் பியர் விலை குறைக்கப்பட்டது. நுவரெலியா பியர் தொழிற்சாலையில் 2000 தொழிலாளர் வேலையிழக்கும் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார். யு டீ. எட்மன் தொழிற்சாலையிலும் 2000 தொழிலாளர் இதே நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. எனின் கவலையுடன் நான் இவ்விலைக்குறைப்புச் செய்தேன். இதனைச் செய்ய அரசாங்கத்துக்கு நஷ்டமே

விஜே: 4000 பேரையே சிந்திக்கிறீர். சாராயம் அருந்தும் லட்சக்கணக்கானோரை நீங்கள் யோசிக்கவில்லையே? (சிரிப்பு)

விஜே: நீங்கள் பியரை இறக்குமதிசெய்கிறீர்கள். அத

(5ம் பக்கம் பார்க்க)

[illegible]ரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜமுனா
மருதநாட்டு
வீரன்
(புதிய பிரதி)

ஸ்லி மானிப்பாய்
தினசரி 2-30, 6-15, 9 30
ரஜனிகாந்த்-பாலாஜி
தீ

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
[illegible]
உயர்ந்தமனிதன்

லிடோ (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி
பார்த்தால்
பசி தீரும்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15 6-15, 9-30
நாகேஷ் கே. ஆர். விஜயா, சுந்தரராஜன்
சர்வர்சுந்தரம் (புதிய பிரதி)

சாந்தி 9வது ஜனத்திரள் வாரம்
(யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9-45
கமல்...
ஸ்ரீதேவி...
குரு
[illegible]
(கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9 30
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) எம். ஜி. ஆர் - லதா நடித்த
சிரித்து வாழவேண்டும்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 5 காட்சிகள்
BRUCE LEE'S
ENTER THE DRAGON

வின்ஸர் 2-வது ஜனத்திரள் மாதம்
(யாழ்ப்பாணம்)
காலை 10-30, பி. ப. 2-30, 6-15 9-30
காளி
ரஜனிகாந்த், சீமா (இருவேடம்),
விஜயகுமார், படாபட்,
சுருளிராஜன்
(கலர்)
பார்த்தவர்கள் வியந்து பேசும் பல லட்ச ரூபா
செலவில் உருவான சண்டைகள்—இனிய
பாடல்கள்—நிறைந்த நெஞ்சைத் தொடும் காவியம்

Regal ரீகல் 10-30 2-5 4 30 7 00 9-15
25th மட்டும் காண்பிக்கப்படும்

A SHAW BROTHERS PRESENTATION
CHALLENGE OF THE MASTERS

சலஞ் ஒப் த மாஸ்டர்ஸ்
கராட்டி சம்பூ மன்னரின் சவால் சண்டைகள்
Fist of Fury, Big Boss, Enter The Dragon
படங்களைத் தொடர்ந்து கராட்டி சண்டைப் படம்

பாராளுமன்றத்தில் பண்டிதர் வலியுறுத்து

தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்று தேவை!

(கொழும்பு)

"எமது பகுதிகளிலே கமக்காரர், கடற்றொழிலாளர், கைத்தொழிலாளர் ஆகிய அனைவருமே இந்த அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையினால் பெரும் பாதிப்பை அடைந்திருக்கிறார்கள். பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் இல்லை. ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்படவில்லை."

இவ்வாறு பாராளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் மீது ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

"எங்கள் பகுதிகளிலே உத்தியோகங்கள் விலைக்கு விற்கப்படுகின்றன. தொழில் [illegible] படிவம் ஏலப்படுவமாக இருக்கிறது.

"இறக்குமதி வரியும் மொத்த விற்பனவு வரியும் அதிகரிக்கப்பட்டதால் சகல பொருட்களின் விலையுமே அதிகரிக்கப்போகிறது. இந்த அதிகரிப்பு 33 சதவீதத்துக்கு அதிகமாக இருக்கும். இறக்குமதியாளர் மொத்த விற்பனையாளர் சில்லறை வியாபாரிகள் அனைவருமே விற்பனை வரி அதிகரிப்பால் விலைகளை அதிகரிப்பார்கள். நகைப்புக்கிடமான விதத்தில் அமைக்கப்பட்டுள்ள பாவனையாளர் சங்கங்கள் இவ்விலை அதிகரிப்பை எவ்விதத்திலும் கட்டுப்படுத்திவிடமாட்டாது.

"இந்த அமைச்சரின் வரவு செலவுத்திட்டத்திலே வருவாயைவிட பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. மீண்டும் வரும் செலவுகளுக்கே வருவாய் போதவில்லை. மேலும் 400 கோடி ரூபா சேர்க்கப்பட்டால்தான் இந்த வரவு செலவுத்திட்டத்தை [illegible] முடிவில் சமப்படுத்தமுடியும். படைகளுக்கு ஒதுக்கப்படும் பணம் ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்கிறது. வெளிநாட்டு ஆபத்து ஏதாவும் எமக்கு உண்டா? அண்டை நாடுகளில் பகைமை உண்டா? இங்கு உண்டாகும் கொந்தளிப்புகளை அடக்கவே என்று கூறக்கூடும். வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்த சில அடிப்படை நடவடிக்கைகள் தேவை. தமிழினத்தையும் எம்மையும் 'புலி' களையும் இந்நாட்டின் அபிவிருத்தியின்மைக்கு காரணமாகச் சொல்லும் ஒரு நிலை உருவாகிவருகிறது. உண்மை நிலையை சரிவர அறியவேண்டும். பழைய வரலாற்றைப் பார்த்தால் ஏன் பயங்கரவாதம் தோன்றியது என்பதை தெரிந்து கொள்ளமுடியும். இது இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் தோன்றியதல்ல. தமது ஆத்திரத்தை - உள்ளக் கொதிப்பை காட்ட - சாத்வீக முறையிலே இதுவரை கண்டதென்ன? என்ற விரக்தியில் இளைஞர்கள் நாமும் ஒரு வழியில் சென்றால் என்ன என்று எண்ணினார்கள். இந்த ஒரு நிலை உருவாகுமென்பதை 1972-ம் ஆண்டிலேயே அப்போதைய அரசியல் நிர்ணய சபையில் நான் வெளியாக்கினேன். இளைஞர்களின் உணர்ச்சியை அறிந்து நாம் இதைக் கூறினோம். எமது உணர்ச்சியை மதியாமல் அந்த அரசியல் அமைப்பு சட்டம் ஆக்கப்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது.

"1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் போது பொலிசார் புரிந்த அநியாயத்தில் பொலீசாரைப் பழிவாங்கும் யோசனை தோன்றியதை எவரும் மறுக்க முடியாது. இதற்கு நம் [illegible] கடந்த அரசாங்கமே பொறுப்பு.

"1976ல் இந்த அரசு பதவிக்கு வரு முன்னரே வட்டுக்கோட்டை மாநாட்டில் தனிநாடு கோரிக்கையை பகிரங்கமாக பிரகடனம் செய்தோம். அந்தப் பிரகடனத்தை பிரசுரிப்பது இராஜதுரோக குற்றமாகும் என்று தெரிவித்து செய்திப்பத்திரிகைகள் அப்பிரகடனத்தை பிரசுரிக்கமுடியாதபடி அன்று இரவு அரசு தடைவிதித்தது. பொலிசாருக்கு முன்னறிவித்தல் கொடுத்து நாமே அந்த பிரசுரத்தை பகிரங்கமாக விநியோகித்தோம். அதற்காக கைதாகி விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டோம்.

இந்த வரலாற்றுப் பின்னணியில்தான் தமிழினம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை மறந்து [illegible] விடுதலை காண முடியாது.

ஜனாதிபதி மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தி, சமரசத்தைக் காண விரும்பின் அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும். தமிழ்மக்கள் திருப்தியுறும்வகையில் அது அமையவேண்டும். (ஈ)

இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் உருவாகும், சிறு பிணிக்கு இடமுண்டு, பொறுமை நன்று.

மீனம்: நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்பட முடியும், புத்திர சுகத்துடன் களத்திரவழியாலும் நன்மை கிடைக்கும், இறை நம்பிக்கை நன்று.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

உப்பாலி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

...ஞர்தான் இத்தொழிற்சாலைகள் நஷ்டமடைகின்றன. எமது மக்களுக்கும் என்ன விழுக்காடும் இறக்குமதி செய்யப்படுவதற்கின் [illegible] நாட்டம் அதிகம்!

விஜே: எல். எம். பெரேரா ஒரு போத்தல் சாராயத்தை எடுத்ததை நீங்கள் ஒரு டிராமில் எழுதுகிறீர்கள்!

விஜே: 1973-இல் உபாலி விஜயவர்த்தனா நிதி அமைச்சராவார். ஐ. தே. க., ஸ்ரீ. சு. க. இரண்டிலுமே அவருக்கு இடமுண்டு. ஆனால் எமது சுதந்திரக்கட்சி (மைத்திரி குழு) ஆட்சிக்கு வரின் அவரையும் சேர்த்து தேசியமயமாக்குவோம்!

விஜே: உபாலி விஜயவர்த்தனா ராஜதந்திர கடவுச்சீட்டைப் பெற்றிருக்கிறார். பிரதம நிதி அமைச்சர் பேர் [illegible] சலுகை வைப்பெற்றிருக்கிறார். நடிகைச் சுரண்டும் இவருக்கு [illegible] சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

விஜே: உபாலி விஜயவர்த்தனாவுக்கு நிதி அமைச்சர் பயப்படுகிறார்; இறைசேரி அதிகாரிகள் பயப்படுகின்றனர். [illegible] மாவதிபதி அவரிடம் செல்லமாட்டார்.

விஜே: ஜனாதிபதி ஆப்போஸிஷன் மீது பொலிஸ் நடவடிக்கை எடுப்பாரா? நீங்கள்தான் நடவடிக்கை எடுப்பீர்களா, சபாநாயகர் அவர்களே!

(சிரிப்பு)

'அபிவிருத்தி சபைகள்

எமது உள்ளக் குமுறலைத் தணிக்க எடுக்கப்பட்ட உபாயம்'

வவுனியா எம். பி.

(கொழும்பு)

'பொதுமக்களின் அபிலாசைகளுக்கு முரணாக அவர்கள் மீது பழுவைச் சுமத்துகின்றதாகவும், கடன் வழங்கு நாடுகளினதும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றினது ஆலோசனைகளுக்கு இணங்க, அவற்றைத் திருப்திப்படுத்த கவனமாகப் படித்து வழங்கப்பட்டதுமாகவே இவ்வரவு-செலவுத்திட்டம் அமைந்திருக்கிறது என்று வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட விவாதம்மீது கண்டனம் தெரிவித்தார். திரு சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

'வரிவிதிப்பின் மூலம் சாதாரண மக்கள் மீதே முழுச் சுமையைச் சுமத்தும் அரசு ஒரு பிரிவுக்கு மென்மேலும் சலுகைகளை அளிக்கிறது.

அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களுக்கு உச்சவிலை விதிக்க அரசு துணியவில்லை. அப்படி விதித்தால் தனவந்தர்கள் கொள்கை உடைய அரசை அவர்கள் எதிர்பார்ப்பார்கள் என்பதனாலேயே வேண்டுமென்றே அதனைச் செய்யவில்லை.

'எமக்குச் சில தனிப்பட்ட பிரச்னைகள் உண்டு. அவற்றுக்குத் தீர்வுகாண நாம் தயாராக இருக்கிறோம், அதை எந்தச் சக்தியும் தடுத்துவிட முடியாது. ஆனால் அபிவிருத்திக்கு ஒத்துழை என்றால் நம் பின்னின்றதில்லை. ஆனாலும் அபிவிருத்திக்காக அமைக்கப்பட்ட அபிவிருத்திச் சபைகளிலே அதிகாரங்களை ஏட்டளவிலும், பேச்சுவார்த்தைகளின்போது அதிகாரங்களை உவட்டளவிலும்தான் காண்கின்றோம். இந்த அபிவிருத்தி சபைகள் என்பன எமது உள்ளக்குமுறல்களைத் தணித்துவிடுவதற்காக எடுக்கப்பட்ட உபாயமே.'

சட்டத்திலே காணி பகிடு; உபயோகம் என்ன இச்சபைகளின் அதிகாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டு, மூன்று தலைவர்களுக்கு முன்னைந்த சுற்றறிக்கையிலே 'ஆலோசனை கூறும் அதிகாரமே' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது!

அமைச்சர் கடன் வழங்கும் நாடுகளிலே 'கியூ'வில் நிற்கின்றார்.

'வடமாகாணத்திலே அண்மையில் வெளிவந்த க. பொ. த உயர்தரப் பரீட்சை முடிவுகள் பரிதாபத்துக்குரிய முறையில் அமைந்திருக்கின்றன, வரலாற்றில் இல்லாதவிதத்தில் தமிழ் மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறியுள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறையால் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. பற்றாக்குறையை நீக்க [illegible] 1981 ஜூன் வரை இந்த அரசாங்கம் 27 ஆயிரம் ஆசிரிய நியமனங்கள் வழங்கியுள்ளது. அதில் 100 நியமனங்களே தமிழ் பேசுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் 14 தொகுதிகளைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 752 நியமனங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. [illegible] கம்பஹ 869, வெலிகம 567, ஹரியகதவ 514, [illegible] 445 என்ற விதத்தில் நியமனங்கள் வழங்கப்பட்ட ஒவ்வொரு தொகுதியிலும் [illegible] 25 [illegible] நியமிக்கப்பட்டுள்ளனர்" என்றார்

(ஈ-ஏ)

வியாபாரிகள் பாவனையாளர் ஒத்துழைப்பு அவசியம்

அபிவிருத்திசபைத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம்

"பாவனையாளர்களின் சங்கப் பிரதிநிதிகளாகிய உங்களுக்குள் வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கக் கூடாது. கடமை-கண்ணியம்-கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும்" என்று யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா யாழ் மாவட்ட பாவனையாளர் சங்க சமாஜ பிரதிநிதிகளுக்கு அறிவுரை கூறினார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் பாவனையாளர் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாவனையாளர் சங்க பிரதிநிதிகளின் சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 16 பிரிவு உதவி அதிபர்களும், மற்றும் யாழ் செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்ட வியாபாரத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு த. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அபிவிருத்திச் சபைத் தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

நாங்கள் எல்லோரும் பாவனையாளர்கள். எங்களின் சகோதரர்கள் தான் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஊழல்-மோசடிகள் எங்கும்தான் நிலவுகிறது. எந்த விஷயத்திலும் நான் ஊக்குவிப்பாளர்களும் [illegible] அமைகிறது. ஆதலால் சட்டம்-நீதிக்கமைய எல்லோரும் நடக்கமுயலவேண்டும்.

"வியாபாரிகள் நஷ்டமடைந்தால் கவலைப்படுவது நாங்கள் அல்ல, நாமும் நஷ்டமும் [illegible].

வரவுசெலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சென்றவாரம் சமர்ப்பிக்கப்பட்ட அன்று சீனி விலை ஏறப்போகிறதென்று பதுக்கியவர்கள் இன்று கண்ணீர் வடிக்கிறார்கள் என்று நகைச்சுவையாகச் சொன்ன அவர் பெற்றோல் விலை எப்பொழுது ஏறுமோ தெரியாதென்றும் சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில், கூட்டுறவு ஸ்தாபனம் ஒரு மக்கள் இயக்கமாக இன்று இல்லை. ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் சில தான் லாபத்தில் இயங்குகின்றன என்றார்.

இஸ்லாமிய வியாபாரிகள் வியாபாரம் செய்யும் முறையைப் பாராட்டிய மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர், மற்றைய வியாபாரிகளும் அவர்களைப்போல நடக்கவேண்டுமென்றும், பாவனையாளர்களும் வியாபாரிகளும் ஒத்துழைத்தால் பிரச்சினைகளுக்கு இடமிருக்காதென்றும் சொன்னார்.

யாழ் மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா பேசுகையில், மேலைநாடுகளில் இப்படிப்பட்ட சங்கங்கள் அரசாங்க ஆதரவில்லாமலே இயங்குகிறது என்றும், மாவட்டப் பாவனையாளர் சங்கங்கள் நன்றாக இயங்கினால், பிரிவுக் குழுக்களும் நல்லமுறையில் இயங்கும் என்றார். மா

இன்று உப மின்நிலையத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நல்லூர் உப அலுவலகத்தின் எல்லைக்குள் 3 1/2 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட உபமின் நிலையத்தை நல்லூர் எம். பி. திரு மு. சிவசிதம்பரம் இன்று சனிக்கிழமை காலை திறந்து வைக்கவுள்ளார்.

இம் மின் நிலையம் மூலமாக திருநெல்வேலியிலும் அதன் அருகாமையிலுமுள்ள 150 பாவனையாளர்கள் பயனடைவார்களென நல்லூர் உப அலுவலகத்தின் நிர்வாக மேற்பார்வையாளர் திரு. பாலலிங்கம் தெரிவித்தார். (செ)

ஆழிக்குமரன்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சமமற்றதாகத் தோன்றியது.

இடது கால் உட்பட எலும்புகள் உடைந்திருந்தன. உடலுள் இரத்தம் சிந்துவது இருந்ததால் உள்ளே சிந்தப்பட்ட இரத்தமாக கிட்டத்தட்ட மூன்று பைந்து இரத்தம் எடுக்கப்பட்டது. உடனடியாகச் செய்யப்பட்ட ஆப்பரேஷனில் [illegible] அணுக்கள் தங்கும் உறுப்பு வெளியே எடுக்கப்பட்டது. உடைந்த நான்கு விலா எலும்புகளில் ஒன்று சுவாசப் பையைத் தாக்கிவிட்டது. முதலில் நடைபெற்ற இந்த ஆப்பரேஷன் மயக்க மருந்துகொடுக்காமலே செய்யப்பட்டது. ஏனெனில் அப்போது அமுக்கம் 30க்கும் குறைந்திருந்தது. அந்நேரத்தில் மருந்து கொடுத்திருந்தால் ஆனந்தன் பிழைத்திருக்கமுடியாது.

ஆனந்தனின் இடது சுவாசப்பை சரியாக வேலைசெய்யவில்லை. நெஞ்சுவலி கூடி வந்த பின்தான் வலதுகாலை ஆபரேஷன் செய்தார்கள். அந்த இரண்டாவது ஆப்பரேஷன் 3-11-81ல் நடைபெற்றது.

தமிழுக்கும், தமிழருக்கும் இவ்வளவு புகழ்தேடித் தந்த தமிழன்னையின் தவப்புதல்வன் ஆழிக்குமரன் ஆனந்தன் இனிமேல் சாதனைகள் செய்வது சாத்தியமற்றது என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். அவருடன் நன்கு பழகியவர்களுக்குத்தான் அவரின் மனவலிமையைத் தெரியும். அவர் ஒரு முரட்டுப் பிடிவாதக்காரன். அவரது அடுத்த முடிவு என்ன என்பதை காலந்தான் முடிவு சொல்லும். அவர் சுகம்பெற்று நீடூழி வாழப் பிரார்த்திப்போம்.

சி. சிதம்பரநாதன்
கொழும்பு-8

வல்லைவெளி முக்கொலை:

தேடப்பட்ட சந்தேகநபர் வவுனியாவில் கைது

வவுனியா

வல்லைவெளி முக்கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சந்தேகநபரான வன்னியசிங்கம் ராஜ்குமார் (26 வயது) நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் வைத்து வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் வவுனிக்குளத்திலிருந்து பணம் கொள்ளை வழக்கொன்று தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு வந்திருந்த போதே பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கம்பர்மலை அறுவர் கொலை வழக்கில் சந்தேகநபர்களில் இராசதுரை அப்புத்துரை, இராசதுரை தேவராசா, இராசதுரை துரைராஜா ஆகிய மூவரும் வல்லைவெளியில் வைத்து கொலைசெய்யப்பட்டது தெரிந்ததே.

கம்பர்மலையில் கொலைசெய்யப்பட்ட ஆறுபேரும் வன்னியசிங்கம் ராஜ்குமாரின் நெருங்கிய உறவினர்களாவர் என்று கூறப்படுகிறது. வெ

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட
உல்லாச பஸ் சேவை
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன், ஞாயிறு
கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
[1] ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8810
[2] யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.
[3] குமிக் ரேவல்ஸ் அன்ட் ரேர்ஸ்
சரஸ்வதி தியேட்டர், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல: 273 சாவகச்சேரி
கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்
ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.
ரவிந்திரா ஸடோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.
J. M. S. மிராண்டாஸ்
109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி. பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866
கட்டணம் ரூபா 65-00

கல்லூரி உதைபந்தாட்டம்:

ஆதரவாளர்கள் மோதல்; வாகனங்கள் சேதம்!

யாழ்ப்பாணம்

இரு கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட சாம்பியன் போட்டியை ஒட்டி இரு கல்லூரிகளினதும் ஆதரவாளர் கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் விளைவாக பலர் காயமுற்றனர். கார் ஒன்று சேதமாக்கப்பட்டது. லொறி ஒன்று முற்றாக சேதமாக்கப்பட்டது.

தெல்லிப்பளையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் பிரிவுச் சாம்பியன் போட்டி முதலாம் பிரிவுச் சாம்பியன் போட்டியின் போதே இரு கல்லூரிகளின் ஆதரவாளர்களிடையே இக் கோஷ்டி மோதல் ஏற்பட்டது.

அந்நேரம் ரோந்து சுற்றிக்கொண்டு வந்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன் சுகுணேந்திரன் கூட்டமாக நின்ற கோஷ்டியினரைக் கலைத்துவிட்டு, ஜீப் வண்டியின் மூலம் காங்கேசன்துறை பொலிசாருக்கு தகவல் கொடுத்தார். பின்பு அங்கு காங்கேசன்துறைப் பொலிசாரிடம் தாக்குதலுக்குள்ளானவரையும் தாக்கப்பட்டவர்களையும் பாரம் கொடுத்தார். தொடர்ந்தும் இப்பகுதிகளில் எதுவித அசம்பாவிதங்களும் நிகழாதவாறு பொலிசார் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றனர். பா

அரசியலமைப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதனால பொருளாதாரத் திட்டம் பற்றி பேசுகிறீர்கள். நாம் பாதுகாப்புடன் வாழ விரும்புகிறோம். கடந்த இரு மாதங்களாக நடந்தவற்றை நீங்கள் அறிவீர்கள். பொருளாதார ரீதியில் சிந்திப்பதாக இருந்தால் பாதுகாப்பாகவாழ வேண்டும். அந்தப்பாதுகாப்பு முற்றுமுழுதாக இல்லை.

இனவாதமல்ல

பாணந்துறை எம்.பி. இச்சபையில் பேசுகையில் சிங்கள மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்குமாறு வலியுறுத்தினார். அது இனவாதமல்ல. நான் அதனை வரவேற்கிறேன். எனவே நான் இங்கு பேசுவது இனவாதமல்ல. இனவாதத்தில் நம்பிக்கையற்றவன் என்பதை என்னை அறிந்தவர்கள் உணருவார்கள்.

"தமிழ் தேசிய இனம் சுதந்திரமாகவும், நீதியுடனும் வாழவிரும்புகிறது. அதனைக் கேட்பது இனவாதமென்றால் அது எனக்குப் புரியாமல் இருக்கிறது.

மக்கள் ஆணை

"மக்கள் ஆணை ஒன்றைப் பெற்றுத்தான் நீங்கள் இந்தச் சபைக்கு வந்தீர்கள். உங்களைப்போலவே நாங்களும் மக்கள் ஆணையொன்றைப்பெற்று வந்தோம். அந்த ஆணையினின்றும் நீங்கள் விலகமாட்டீர்கள் ஏனெனில் நீங்கள் நேர்மையானவர்கள், அதே போலவே எங்களை நேர்மையற்றவர்கள் என்று மக்கள் சொல்வதையும் நீங்கள் விரும்பமாட்டீர்கள்.

"வெளிநாடுகளில் நாம் உங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாகக் கூறுகிறீர்கள். நீங்கள் சுதந்திரமாக வாழவிரும்புகிறீர்கள். நாமும் சுதந்திரமாகி வாழவிரும்புகிறோம். இந்தப் பிரச்சினை உள்ளவரை பொருளாதார பிரச்சினையை தீர்க்க முடியாது. எனவே தமிழ்தேசிய இனம் அதன் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வாழ அரசியல் வழியில் அவர்கள் செல்லவிடுங்கள்.

"நாங்கள் இச்சபைக்கு வருமுன், தந்தை செல்வாவின் சமாதியின் முன் விடுதலைக்கு அயராது உழைப்போம் என உறுதி எடுத்தோம். அந்த சத்தியம் எங்களையும் இயக்கத்தினரையும் என்றும் காப்பாற்றுமென நம்புகிறோம்" (உ-கா)

உபாலி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இது தொடர்பாக விசாரணை செய்யப்படவேண்டுமென்று அத்தனகல உறுப்பினர் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது குறித்து கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்படும் என்று நிதிய திரு ரொனி டி மெல் அவருக்குப்பதிலளித்தார். வெ

கூட்டுத்தாபன—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளர்களை எவ்வித அதிகாரமுமின்றி வேலைக்கமர்த்தி வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளை, ஏனைய தொழிலாளரும், பொதுமக்களும் எதிர்க்க முன்வராதவிடத்து, இக்கூட்டுத்தாபனத்தை முடிவிடக்கூடிய சூழ்நிலை உருவாகுமென திரு. விஜயானந்தன் எச்சரித்துள்ளார். இ

மரண அறிவித்தல்

பொன்னுத்துரை சர்வேஸ்வரன்
(அரி)

[illegible], 12-ம் நம்பர், யாழ்ப்பாணம் கா. பொன்னுத்துரை திலகவதி தம்பதியின் புதல்வன் சர்வேஸ்வரன் (அரி) சவுதி அரேபியாவில் 7-11-81ல் அகால மரணமானார். இவர் ரூபினிதேவியின் அன்புக் கணவரும் திருமதி சின்னத்துரை நாகரத்தினத்தின் அன்பு மருமகனும் சற்குணராஜா, ரஞ்சினிதேவி, தயாளகுணலிங்கம், சிவாஜினிதேவி, சிவராசலிங்கம் (மின்சார நிலையம்), ஜோதிலிங்கம், பஞ்சலிங்கம், சிவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலாஜோதியின் அன்பு அண்ணனும் நா. இராசையா, அருளம்பலம், கமலாதேவி (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனும், திருமதி செல்லையா தெய்வானைப்பிள்ளை நாகமணி, விசுவலிங்கம் கோவிந்தசாமி, முன்னாள் பண்டத்தரிப்பு கிராமசபை அங்கத்தவர் அம்பலவாணரின் பெருமகனும், பாலகிருஷ்ணனின் சிறிய தந்தையும், மயில்வாகனம் ஞானம்மா, சிவராசா நாகரத்தினம், ராஜரத்தினம் பரமேஸ்வரி ஆகியோரின் பெருமகனும் சதீசின் அன்பு மாமனுமாவார். ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். 1522

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 303-ம் இலக்கத்திலுள்ள சொந்த அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper, The General P. O. Sri Lanka Regd. Q. P. 100286/81, P. O. Box 49. Jaffna. Grams: [illegible] 7707, 889, 8186.